## இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் - 2015

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ன ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் தாமதத்தின் பேரில் கூட்டுத்தாபனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டடது. இதற்கு மேலதிகமாக நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்தும் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக்கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்பட்டதா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,923,741 ஆன மூலதன ஒதுக்கீடு (capital reserve) மற்றும் ரூபா 19,523 ஆன அண்ணியச் செலாவணி சீராக்க ஒதுக்கத்தின் (foreign exchange reconciliation reserve) தன்மை மற்றும் நோக்கங்கள் தொடர்பாக நியமத்தின் 79(ஆ)இன் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08**

(i) 2009 சனவரி 01 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 06 மாத காலப்பகுதியில் ஒதுக்கத்தின் கீழ் முன்னைய ஆண்டுகளின் சீராக்கமாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 38,613,358 தொகை மீளாய்வாண்டின் போது நிறுத்திவைத்த உழைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் அம்மீதி தொடர்பாக விரிவான தரவுகள் மற்றும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட ரூபா 15,715,396 தொகையான இறுதி முடிவுப்பொருள் இருப்பு குறைத்து சீராக்கப்பட்டதை சரிசெய்த போது நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் பின்னோக்கி சீராக்கம் செய்யப்படாமல் மீளாய்வாண்டின் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களின் ஆரம்ப மீதிக்கு சீராக்கப்பட்டிருந்ததுடன், அது கணக்கு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12**

வருமான வரிச் செலவினம் மற்றும் கணக்கீட்டு இலாபத்திற்கு இடையே உள்ள தொடர்பு தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்த மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்றாகத் தேய்மானத்திற்குள்ளான ரூபா 104,988,115 பெறுமதியான சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்ந்தும் கூட்டுத்தாபன நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20**

(i) அரசின் மானியங்களிலிருந்து செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்களுக்குரிய ரூபா 1,237,316 தொகையான வருடாந்த பெறுமானத்தேய்வு செலவினத்திற்கு சமமான பெறுமதியில் அரச மானியத்திற்கு காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் அரசாங்க மானியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 94,410,400 சொத்துக்களுக்கு காலக் கழிவு செய்யப்பட்டிருந்த போதிலும், குறித்த சொத்துக்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24**

கூட்டுத்தாபனத்தினால் உயர் முகாமைத்துவத்திற்கு செலுத்திய குறுங்கால ஊழியர் நலன்கள், ஏனைய நீண்டகால நலன்கள் மற்றும் சேவையை முடிவுறுத்துதல் நலன்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

(i) நியமத்தின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 86,681,085 தொகையான வியாபார கடன்பட்டோரின் காலக்கழிவுப் பெறுமதியை (amortized cost) கணிப்பிடாமல் ஐயக் கடன் மற்றும் அறவிட முடியாக் கடனுக்காக ரூபா 2,493,761 நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ii) ஊழியர் கடன் காலக்கழிவுப் பெறுமதியை (amortized cost) கணிப்பிடுவதற்காக மீளாய்வாண்டின் சந்தை வட்டி வீதம், எளிய வட்டி வீதமாக பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுககளின் போது எளிய வட்டி வீதமாக பயன்படுத்தப்பட்ட 12 சதவீதமான வீதத்தை நியாயமான காரணங்களை வெளிப்படுத்தாமல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 16,710,369 ஆன ஊழியர் கடன் காலக் கழிவுப் பெறுமதி கணக்கீட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 141,243 தொகையான மீண்டுவரும் செலவினம், காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணிப்பீட்டு வழுக்கள் காரணமாக மீளாய்வாண்டிற்காக நடைமுறையல்லாத சொத்துக்களின் வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 54,655 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த ரூபா 163,083 தொகை விற்பனையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2 கணக்கு விடயங்களின் பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் அட்டவணைகள் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 2,340,683 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | கணக்கின் பெயர் | பேரேட்டு கணக்கின் பிரகாரம் மீதி | பட்டோலை/மீதிகளை உறுப்படுத்தல்களின் சான்றிதழ் பிரகாரம் மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) | விற்பனைகள் | 519,887,808 | 522,196,560 | 2,308,752 |
| (ஆ) | இலங்கை வங்கி நிலையான வைப்புக்கள் | 1,747,780 | 1,715,849 | 31,931 |
| | | | | 2,340,683 |

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | கணக்கு விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | வெளித்தரப்பினருக்கு நன்கொடையாக வழங்கிய மருந்துகள் | 765,352 | முறையான அங்கீகாரம் |
| (ii) | பணிக்கொடை ஏற்பாடு | 3,958,216 | கணிப்பீடுகளுக்குரிய பட்டோலைகள் |
| (iii) | நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக் கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கம் | 93,373,135 | நாட்குறிப்பு பதிவுகள் |

## 2.3 பெற வேண்டிய கணக்குகள்

2012 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 243,031 ஆன வருமானத்தை இனங்காண்பதற்காக எவ்வித எழுத்துமூல சான்றுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் போதியளவு நிதிஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ரூபா 353,359,512 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 41,058,076 மிகையாக இருந்ததுடன், அதற்கு முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,968,428 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டினது மிகை ரூபா 33,089,648 இனால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏனைய வருமானம் ரூபா 2,627,298 ஆல் குறைவடைந்தமை மற்றும் விற்பனை மற்றும் விநியோகச் செலவினம் ரூபா 44,027,383 ஆல் அதிகரித்திருந்த போதிலும் விற்பனை ரூபா 74,946,110 ஆல் அதிகரித்தமை மற்றும் விற்பனைக் கிரயம் ரூபா 20,198,388 ஆல் குறைவடைந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 62,731,392 ஆன மிகை 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 42,255,668 தொகை மற்றும் ரூபா 14,474,024 வரை குறைவடைந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா.62,153,332 வரை மீண்டும் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசிற்கு செலுத்திய வரிகளை சீராக்கம் செய்த பின்னர் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 194,292,276 ஆன பங்களிப்பு தளம்பளுடன் 2015 ஆம் ஆண்டில் ரூபா 245,255,493 வரை அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டினுள் மொத்த இமாத்த இலாப விகிதம் மற்றும் இலாப விகிதம் முறையே 13.75 சதவீதத்தினாலும் 6.1 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்ததுடன் நடைமுறை விகிதம் 27.63 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

### 3.3 பெறுகை செயற்பாடு

அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.2 வழிகாட்டலின் பிரகாரம் தொழிற்பாட்டுக் கிரயம் அல்லது வாழ்க்கை சுற்று கிரயம் (Operational cost or life cycle cost) கணக்கிடப்பட்டு கூறுவிலை மதிப்பீடு செய்யப்படாமல் இயந்திரத்தின் கிரயத்தை மாத்திரம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி மீளாய்வாண்டின் போது ரூபா 4,929,309 செலவுசெய்து பொதிசெய்யும் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தில் இருக்க வேண்டிய தொழில்நுட்ப விதந்துரைப்புரைகளைக் கொண்டிருக்கவில்லை.